பதிலாக சவுக்கு மரங்கள் போன்றவற்றை வைத்து உயிர் வேலி அமைக்கக்கூடிய முறை இருக்கிறது சுவருக்குப் பதிலாக. அந்த முறையில் அமைக்கவேண்டுமென்று அரசு ஏற்கனவே அதிகாரி களுக்குத் தெரிவித்திருக்கிறது.

College by Madras Homoeopathy Development Association

* 435 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Madras Homoeopathy Development Association proposes to open a College in Madras this year; and

(*b*) if so, whether the sanction of the Government has been applied for?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இதைப்பற்றி அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இப்போது இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளில் ஹோமியோபதியையும் ஒரு பாடமாக கற்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அலோபதி மருத்துவத் துறை யில் உள்ளவர்கள் ஹோமியோபதி முறையை இன்னும்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவர் இருவர்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அலோபதி மருத்துவத்துறையில் பாடம் நடைபெறுகிற இடத்தில் இதைச் சேர்த்து நடத்துவது என்பது இயலாது. தனியாகக் கல்லூரி ஏற்படுத்தி அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நாடு முழுவதும் ஓமியோபதித் துறையில் மருத்துவம் செய்யக்கூடிய மருத்துவர்கள் பரவலாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு எவ்விதமான பயிற்சியும் கிடையாது. ஆகவே, இம்மாதிரி ஓமியோபதி கல்லூரி ஏற்படுத்தி ஓராண்டு, இரண்டாண்டு பயிற்சி பெற்று பிறகுதான் மருத்துவப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை அரசு கொண்டு வருமா?

1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஓமியோபதி கல்லூரியில் குறைந்தது $4\frac{1}{2}$ அல்லது ஐந்து ஆண்டு காலம் படிக்க வேண்டும். நாலைந்து ஆண்டு காலப் படிப்பு என்ற காரணத்தால் விரிவான மருத்துவ மனை ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஓராண்டுக் காலப் படிப்பு என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இன்றைக்கு ஏற்கெனவே மருத்துவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பத்தாண்டுக் கால அளவுக்குப் பணியாற்றி இருப்பார்களானுல் அவர்கள் பதிவு செய்யப்படுவார்கள். ஓமியோபதி சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அண்மையில் ஓமியோபதி கவுன்சில் ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : ஓமியோபதி படிப்பை சிலர் 9 மாதங்களில் தபால் மூலமாகக் கற்று ஊசி போடுகிருர்கள். ஸ்டெதஸ் கோப் வைத்துப் பார்க்கிருர்கள். அவர்கள் நல்ல முறையில் டயக்னஸ் செய்து பார்க்க முடியாத நிலையில் மக்களுக்கு மருந்து தருகிருர்கள். இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள்ளாக பதிவு பெற்றவர்கள் என்ற நிலையிலுள்ள மருத்துவர்கள் தவிர மற்றவர்கள் இப்படி மருத்துவம் செய்யக்கூடாது என்று கவுன்சில் மூலமாக ஆணை பிறப்பிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மாநில குடும்பநலத் திட்ட அமைப்பு

* 436 வினு.—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட அமைப்பில் (ஸ்டேட் பேமிலி பிளானிங் பீரோ) டெமோகிராபிக் செல் (Demographic Cell) எத்தனை ஆண்டுகளாக இயங்குகிறது?

(இ) இதில் எவ்வகைப்பட்ட அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்?

(உ) இதற்கு அனுமதிக்கப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்ற இரண்டு ஆண்டு காலமாக இயங்கி வருகிறது.